11.03.2026

அ.வ.எண். 54/2024

வா.சா.2 – திரு. முத்துசாமி, த/பெ. பழனிக்கவுண்டர்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 11.03.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 1ம் வாதி ஈஸ்வரன் எனக்கு சகளை என்றால் சரிதான். 1ம் வாதி சொல்லி அவருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது ஆகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 1925 ம் ஆண்டு பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தை படிக்காமல் அதில் உள்ள விவரங்களை யார் சொல்லி தெரியும் என்றால் 1ம் வாதி ஈஸ்வரன் சொல்லி தெரியும். 2007 பாகப்பிரிவினை ஆவணத்தில் உள்ள விவரங்கள் தெரியாது என்றால் பாகம் குறித்து எழுதப்பட்டுள்ளது.

2. க.ச.எண்.761 ல் தடம் உள்ளது என சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் வாதி க.சஎண்.761/1 காலைக்கு வடபுறமாக க.ச.எண்.743 உள்ளது என்றால் தெரியாது. 1ம் வாதியின் பூமிக்கு வடபுறமாக வாரப்பட்டி செல்லும் கிழமேல் ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிழமேல் ரோட்டிலிருந்து தெற்கே 1ம் வாதி பூமிக்கு தடம் செல்கிறது என்றால் இல்லை. க.ச.எண்.743 காலை வழியாக தெற்கு வடக்காக வாதிகள் சென்று கொண்டிருந்தனர் என்றால் சரியல்ல.

3. 90 ஆண்டுகளுக்கு மேலாக க.ச.எண்.761 காலையில் வடபுறமாக தடம் செல்கிறது என சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.761 காலையில் காற்றாலை நிறுவப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காற்றாலையை ஒட்டி அதை பராமரிக்க வேண்டி ஜூப் தடம் செல்கிறது என்றால் ஓரத்தில் இல்லை. வடகோட்டில் கிழமேலாக செல்கிறது. 1ம் வாதிக்கு பாத்தியப்பட்ட தடம் 1ம் பிரதிவாதியின் இடத்தில் இல்லை என்றால் சரியல்ல.

எனக்கு க.ச.எண்.761 நம்பர் சொத்து குறித்தும், எதுவும் தெரியாது என்றும், வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur